செய்தி வெளியீடு எண்:965 நாள்:28.10.2021

**பத்திரிக்கைச் செய்தி**

மாண்புமிகு அமைச்சர் (ஆதிதிராவிடர் நலம்) அவர்கள் 08.09.2021 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021-22 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு கூட்டத்தொடரில் இத்துறையின் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது, கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தார்கள்.

"ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணாக்கரின் பாதுகாப்பினை உறுதி செய்திடும் பொருட்டு திருச்சிராப்பள்ளி, தேனி, திண்டுக்கல், அரியலூர், மதுரை, நாகப்பட்டினம், திருவாரூர், பெரம்பலூர், இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள 13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச்சுவர் கட்டப்படும்."

மேற்காணும் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் சுற்றுச்சுவர் கட்டப்படாமலும் மற்றும் கட்டப்பட்டு பகுதி நிலையிலும் உள்ளதால், மாணாக்கர்களின் பாதுகாப்பினை கருத்தில் கொண்டும், பள்ளிக்குண்டான நில ஆக்கிரமிப்பை தடுக்கும் வகையிலும் 7 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 6 மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.3,83,76,571/- மதிப்பில் 3950 மீட்டர் நீளத்திற்கு சுற்றுச்சுவர் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ள, நிர்வாக அனுமதி அளித்தும் நிதி ஒதுக்கீடு செய்தும் **அரசாணை (நிலை) எண்:75, ஆ.தி.(ம)ப.ந. (ஆதிந2(1)) துறை, நாள் :25.10.2021-** ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

க. மணிவாசன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9